**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 185 of 2019**

Prosecution witness LW14 (PW10) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 12.03.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | டாக்டர். மகேஷ் | Father's Name | : | திரு.லிங்கன் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused : A1 to A3 Present.**

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் ஓசூர் ESI மருத்துவமனையில் முதுநிலை குடிமைமுறை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.02.2018 தேதி நான் ஓசூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 30 வயது மதிக்கதக்க முருகேஷ் என்ற ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மத்திகிரி காவல் ஆய்வாளர் அவர்களின் கடிதம் 55/2018 அதன்மூலம் பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். பிரேதத்தை தலைமை காவலர் SC.226 திரு. சரவணன் அவர்கள் அடையாளம் காட்டினார் . பிரேத பரிசோதனை அன்று மாலை 4.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. பிரேதத்தின்மீது பிரேத விரைப்பு தன்மை காணப்பட்டது . மல்லாளந்த நிலையில் ஆண் பிரேதம் காணப்பட்டது. வலது கண் திறந்திருந்தது. இடது கண் முடியிருந்தது. வாய் மூடியிருந்தது. நாக்கு வாயின் உள்ளே இருந்தது.

**வெளிபுற காயங்கள் :-**

1) வலது முன் நெற்றியில் 7cmX3.5 cmX எலும்பு ஆழத்திற்கு கிழந்த காயம் காணப்பட்டது.

2) வலது புருவத்திற்கு மேல் 8cmX3cmX எலும்பு ஆழத்திற்கு கிழந்த காயம் காணப்பட்டது.

3) வலது முன் நெற்றியில் 4cmX3cmX0.5cm அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது.

4) வலது காதுக்கு 1Cm கீழே 15cmX3cm X எலும்பு ஆழத்திற்கு கிழந்த காயம் காணப்பட்டது.

5) கழுத்திற்கு முன்புறம் 20cmX4cmX எலும்பு ஆழத்திற்கு கிழந்தும் ,அதற்கு கீழே உள்ள எலும்பு முறிந்து காணப்பட்டது.

6)இடது காதுக்கு 3cm பக்கத்தில் 8cmX3cmX3 cm அளவில் கிழந்த காயம் காணப்பட்டது.

7) கழுத்தின் வலது பக்கத்தின் 5cmX3cmX எலும்பு ஆழத்திற்கு நான்கு கிழந்த காயங்கள் காணப்பட்டது.

8) வலது தோள்பட்டையில் 12cmX10cmX எலும்பு ஆழத்திற்கு கிழந்த காயம் காணப்பட்டது.

9) வலது முழங்கை நசுங்கி காணப்பட்டது.

10) இடது ஆள்காட்டி விரல் 6cmX3cmX எலும்பு ஆழத்திற்கு கிழந்த காயம் காணப்பட்டது.

11) இடது சிறுவிரலில் 10cmX3cmX எலும்பு ஆழத்திற்கு கிழந்த காயம் காணப்பட்டது.

12) வலது இடுப்பில் 10cmX4cm அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

13) வலது நான்காவது கால் விரல் சிறைந்து காணப்பட்டது.

**<u>உட்புற காயங்கள்</u>**

1) நாவடி எலும்பு நன்றாக இருந்தது.

2) விலா எலும்புகள் நன்றாக இருந்தது.

3) இதயம் 210 gram எடைக்கொண்டும் அறைகள் காலியாக காணப்பட்டது.

4) வலது நுரையீரல் 420 கிராம் எடைக்கொண்டும், இடது நுரையீரல் 390 கிராம் எடைக்கொண்டு இருந்தது , குறுக்கு வெட்டு தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது.

5)கல்லீரல் 1200 கிராம் எடை இருந்தது . குறுக்கு வெட்டு தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது.

6) இரைப்பையில் சுமார் 150 கிராம் அளவுக்கொண்ட பாதி செரிமாணமான உணவு காணப்பட்டது.

7) சிறுநீரகங்கள் 120 கிராம் எடைக்கொண்டும் , குறுக்கு வெட்டு தோற்றத்தில் வெளிறியும் காணப்பட்டது.

8) மண்ணீரல் 110 கிராம் எடைக்கொண்டும் , குறுக்கு வெட்டு தோற்றத்தில் வெளிரியும் காணப்பட்டது.

9) மூத்திரை பை காலியாக இருந்தது.

10) கபாலத்தின் வலது பக்க எலும்பு முறிந்து காணப்பட்டது.

11) மூளையின் மேல் சவ்வு கிழிந்து காணப்பட்டடது , மூளை 1300 கிராம் எடைக்கொண்டு இருந்தது, மூளையின் மேல்பகுதியில் இரத்த கட்டிகள் காணப்பட்டது.

13) கபாலத்தின் அடிபாகம் முறிந்து காணப்பட்டது.

பிரேத பரிசோதனை அன்று மாலை 5.30 மணிக்கு முடிவுப்பெற்றது. இறந்து போன நபர் பிரேத பரிசோதனை நடைபெறுவதற்கு முன்னர் 12−18 நேரத்திற்கு முன்பு இறந்திருக்கலாம் என்றும் , அவருக்கு ஏற்பட்ட பல்வேறு காயங்களால் ஏற்பட்ட அதிர்ச்சினாலும், இரத்த போக்கினாலும், தலையில் ஏற்பட்ட பலத்த காயத்தினாலும் இறப்பு ஏற்பட்டு இருக்கக்கூடும் என்றும் கருத்துரை வழங்கினேன்.

இது சம்பந்தமாக நான் கொடுத்த பிரேத பரிசோதனை சான்றிதழ் தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது. வேண்டுகோள் கடிதம் **EX.P.15** ஆகும். பிரேத பரிசோதனை அறிக்கை **Ex.P.16** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நான் பிரேத பரிசோதனை 5.30 மணிக்கு முடித்த பிறகு உடனே போலீசாரிடம் உடலை ஒப்படைத்துவிட்டேன். மேற்படி நபருக்கு ஏற்பட்ட 1−8, 10, 11 ஆகியவை கிழிந்த காயங்கள் என்றால் சரிதான் . போலீசார் என்னை விசாரித்தபோது ஆயுதங்களை காட்டி அது சம்பந்தமான அந்த ஆயுதத்தால் மேற்கண்ட கிழிந்த காயங்கள் ஏற்படுமா என்று விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட காயங்கள் இரயிலின் கூர்மையான தகடுகளால் கிழத்தால் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை : இல்லை**</u>

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.03.13 10:19:48 +0530